# <u>மரங்கள் எடுத்துச் செல்வதை ஒழுங்குபடுத்தும் விதிகள்</u>
# (TIMBER TRANSIT RULES)

வனப்பொருட்களை (மரங்கள், விறகுகள், மரஎண்ணெய், பிசின் இது தவிர வனச் சட்டம் பிரிவு (2)-இல் குறிபிட்டுள்ள ஏனையப்பொருட்களை) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் பொழுது இந்திய வனச் சட்டம் 1927 பிரிவு (1)இன் படி அரசின் அனுமதி பெறவேண்டும். அப்படி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக, அரசு அனுமதி இல்லாமல், உரிமையில்லாத பொருட்களையும், அரசுக்கு சொந்தமான பொருட்களை எடுத்துச் செல்வதை தடுக்கவும், அரசுக்கு சேரவேண்டிய கட்டணங்களை முறைப்படி வசூலிக்கவும், அரசு பொருட்கள் திருடுபோகாமல் பாதுகாக்கவும், எடுத்து செல்லபடுகின்ற பொருட்களுடைய அளவு, மதிப்பு, தரம், உரிமம் இவற்றை பாசோதித்து பார்க்கவும், சட்டத்திற்கு புறம்பாக செயல்படுபவர்கள் மீது அபராதமும், தண்டனையும் விதிக்கவும், இதுபோன்ற நோக்கங்களுக்காக மரங்கள் எடுத்துச் செல்வதை ஒழுங்கு படுத்தும் விதி, இந்திய வனச் சட்டம் 1927-ஆம் வருடம் பிரிவு (1)-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இயற்றப்பட்டுள்ளது,

## இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 திருத்தம் 2004
**(INDIAN WILDLIFE (PROTECTION) ACT, 1972 AMENDMENT 2004)**

இந்திய வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் முக்கிய நோக்கமானது வனவிலங்குகள் பறவைகள், தாவரங்கள் முதலியனவற்றை காப்பது. இந்திய வன விலங்கு பாதுகாப்பு சட்டம் பிரிவு (2)-ல் கூறப்பட்டுள்ள வரையறை அனைத்தையும் முறை படுத்தவும், வன விலங்குகள் வேட்டையாடப்படுதல் மற்றும் அதன் பொருட்களை (கொம்பு, தோல், ரோமம், முதலியன) விற்பனை செய்வதை தடுக்கவும் வனவிலங்குகளின் இருப்பிடங்களை சேதப்படுத்தாமல் தடுக்கவும் மற்றும் சேதப்படுத்துபவரை தண்டிக்கவும், வனவிலங்கு சரணாலயம் அமைக்கவும், மிருகக்காட்சி சாலைகளை முறைப்படுத்தவும் இந்த சட்டமானது இயற்றப்பட்டுள்ளது. உயிரிகள் என்று சொல்லும்போது (தேனீக்கள், வண்ணத்து பூச்சிகள், கனுக்காளி வகைகள், மீன்கள் டால்பீன், திமிங்கலம், ஆமை, முதலை) போன்று மற்ற எல்லா உயிரினங்களும், விலங்குகளும் இதில் அடகும் மேலும் பவளங்கள் மற்றும் அலையாத்தி தாவரங்களும் அடங்கும்.

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் அட்டவனை 1 முதல் 6 வரை உள்ள பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள விலங்குகள் மற்றும் தாவரங்களை சேதப்படுத்தவோ அழிக்கவோ கூடாது,

# <u>மர அறுப்பகம் நிறுவுதல் மற்றும் முறைபடுத்தும் விதி</u>
## (SAW MILL ESTABLISHMENT AND REGULATION RULES)

***<u>நோக்கங்கள் :</u>***

1. அரசுக்கு சொந்தமான மரங்கள் திருடுவதை தடுப்பது
2. அனுமதியில்லாமல் மரங்கள் வெட்டபடுவதை தடுப்பது மற்றும் தண்டிப்பது.
3. காடுகள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மரங்களை பாதுகாப்பது.
4. கட்டுபாடின்றி மரங்கள் வெட்டுவதை தடுப்பது
5. சட்டத்திற்கு விரோதமான மர விற்பனையை தடுப்பது.
6. தேவைக்கு அதிகமாக கட்டுபாடின்றி உருவாகும் மர அறுப்பகங்களை தடுப்பது.

இதுபோன்ற நோக்கத்துடன் மர அறுப்பகம் நிறுவுதல் மற்றும் முறைபடுத்தும் விதிகள் இயற்றப்பட்டுள்ளது.